**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**OS.No:** 12/2017 நாள் 09.09.2025.

பிவாசா.1, திரு.N.S.பாலமுருகன்

**பிவாசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

இந்த தாவா கோவிலானது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று கேட்டால் எனக்கு சர்வே எண் தெரியாது. கோவிலை சுற்றியுள்ள இடங்கள் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 கிரைய ஆவணங்கள் படி கிரையம் பெறப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ல் கண்ட சொத்துக்களை வழக்கில் உள்ள வாதிகளால் சொல்லப்படும் நான்கு ஜாதிகள் மற்றும் அவைகளின் 12 உட்பிரிவுகளை சேர்ந்த பிரதிநிதிகளால் கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் எங்கள் சங்கத்தில் இருந்து தீர்மானம் போட்டு எதையும் வாங்கவில்லை. பாணர் சமூகத்தை சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் பாணர் குல தையல்காரர் தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக இல்லை என்றால் சரிதான். தாவா கோவிலின் பூசாரி பெயர் பேயாண்டி. அவர் பாணர் குல சமுதாயத்தை சேர்ந்தவர். அவர் பாணர் குல சமுதாய தாவா கோவில் நலனுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அவர் கோவில் சார்பாக ஏதேனும் கிரைய நடவடிக்கைகள் மேற்கொண்டால் அதனை எங்களது சங்க உறுப்பினர்களிடம் தெரியப்படுத்த வேண்டும் என்றால் சரிதான். பேயாண்டி அப்பா பெயர் காத்தமுத்து பூசாரி. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணத்தில் காத்தமுத்து பூசாரி குமாரர் பேயாண்டி என்று தான் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பேயாண்டி என்பவர் வாதிகள் சொல்லும் நான்கு சமுதாயம் மற்றும் அதனுடைய 12 உட்பிரிவுகளின் பிரதிநிதி என்ற முறையில் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 கிரைய ஆவணங்களை கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 கிரைய ஆவணங்களில் கண்ட சொத்துக்களுக்கு மால்களாக தாவா கோவில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் பற்றி மேற்படி பேயாண்டி என்பவர் பாணர் குல சமுதாயத்தில் தெரிவிக்கப்பட்டதற்கான குறிப்பு ஏதேனும் உள்ளதா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லும் பாணர் குல தையல்காரர் சங்கத்திற்கு வரவு செலவு கணக்கு உள்ளது. எங்கள் சங்கத்திற்கு பூசாரி தான் வேலையாளாக

நியமித்துள்ளோம். அவருக்கு சம்பளம் என்று சொல்லி எதுவும் நாங்கள் நிர்ணயம் செய்தது கிடையாது. வா.சா.ஆ.16 ல் கண்டுள்ள அருணாச்சலம் என்பவர தொண்டைமான் சமுதாயத்தை சேர்ந்தவர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அருணாச்சலம் என்பவரை எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்படி அருணாச்சலம் என்பவரை எங்களது கோவில் நிர்வாக சங்க தீர்மானப்படி அவரை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதாக உள்ளது என்று சொன்னால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் கோவில் சங்கத்திற்கு அருணாச்சலத்தை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு அது சங்கங்களின் பதிவு சட்டப்படி பதிவாகி உள்ளது என்று சொன்னால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. மேற்படி அருணாச்சலம் என்பவர் தொண்டைமான் சமுதாயத்தை சேர்ந்தவரா என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் 3ம் நபராக காண்பிக்கப்பட்டுள்ள முத்துக்குமார் என்பவர் வாதிகளின் ஒரு பிரதிநிதியாக இருந்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். அதுபோல் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் 5ம் நபராக காண்பிக்கப்பட்டுள்ள மனோகரன் என்பவர் வாதிகளின் ஒரு பிரதிநிதியாக இருந்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். மேற்படி முத்துக்குமார் என்பவர் தொண்டைமான் சமுதாயத்தை சார்ந்தவர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபோல் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் 5ம் நபராக காண்பிக்கப்பட்டுள்ள மனோகரன் என்பவர் செம்மான் சமுதாயத்தை சார்ந்தவர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை நான் உண்மைதன்மை மற்றும் எங்களை கட்டுப்படுத்தும் என்ற நோக்கில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அப்படியில்லை பி.வா.சா.ஆ.5 ஆவணம் போர்ஜரியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை காண்பிக்கவே தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பி.வா.சா.ஆ.5 ஆவணமானது போர்ஜரியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேனா என்று கேட்டால் சொல்லவில்லை. தற்போது தான் சாட்சியத்தில் சொல்கிறேன்.வா.சா.ஆ.19 ஆவணத்தில் கண்ட மதனராணியின் தகப்பனார் கருப்பையா என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. SV.கருப்பையா என்பவரை தான் எனக்கு தெரியும். என்னிடம்

காட்டப்படும் வா.சா.ஆ.23 ஆவணமானது தாவா கோவிலுக்கு 24ம் ஆண்டு திருவிழா அழைப்பிதழ் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவணம் / ரசீது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.25 ஆவணத்தில் மேற்படி அருணாச்சலம் என்பவரை நிர்வாக தலைவராக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. வா.சா.ஆ.25 ஆவணத்தில் கண்ட V.அருணாச்சலம் என்பவரை யார் என்று எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் தானாக வா.சா.ஆ.25ல் ரசீதை வழங்கியவர் தான் கையொப்பம் செய்துள்ளார் என்றும் அருணாச்சலம் என்பவர் கையெழுத்து செய்யவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். வா.சா.ஆ.31 ஆவணமானது தாவா கோவிலுக்கு 63ம் ஆண்டு திருவிழாவிற்கான சிறப்பு மலர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்படி V.அருணாச்சலம் என்பவர் தான் நிர்வாக தலைவராக இருந்து கையொப்பம் செய்துள்ளதாக உள்ளது என்றால் அவர் கோவிலின் பெயரை மாற்றி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை தயார் செய்துள்ளார் என்பதை காண்பிக்கவே தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடத்தில் இல்லை. பி.வா.சா.ஆ.1 ரசீது புத்தகத்தை நான் ஏற்றுக்கொள்கிறோனா என்று கேட்டால் ஏற்றுக்கொள்கிறேன். மேற்படி பி.வா.சா.ஆ.1 ரசீது புத்தகத்தில் இந்த வழக்கின் வாதிகளின் பிரதிநிதித்துவம் முறையில் வழக்கை தாக்கல் செய்துள்ள முத்துக்குமார் என்பவர் அதில் நன்கொடையை வசூல் செய்பவர் என்ற இடத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். பி.வா.சா.ஆ.1 ரசீது புத்தகமானதை தாவா கோவில் நிர்வாகத்தில் இருந்து அச்சடிக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை நான் ஏற்றுக்கொள்கிறேனா என்று கேட்டால் ஏற்றுக்கொள்கிறேன். சாட்சி மீண்டும் தானாக வேறு இடத்தில் கட்டிடம் கட்டப்போவதாக சொல்லி மேற்படி ஜாதியை போட்டு பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை தயார் செய்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். இவ்வழக்கின் வாதிகளின் பிரதிநிதித்துவம் முறையில் வழக்கை தாக்கல் செய்துள்ள முத்துக்குமார் என்பவர் திருத்தங்கல் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் எம்.எஸ்.சி வரை படித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் மற்றொரு பிரதிநிதி குருவராஜ் என்பவர் இராஜபாளையத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்படி நபர்கள் இருவர் பெயரும்

தலைமை மற்றும் முன்னிலை என்ற இடத்தில் உள்ளது என்று சொன்னால் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது ஆனால் அவர்கள் தாவா கோவிலுக்கு கட்டிடம் கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் அல்ல என்றும் வேறு இடத்திற்கு கட்டுமானம் கட்டுவதற்கான ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும் சாட்சியம் அளிக்கிறார். பி.வா.சா.ஆ.7 ஆவணமானது தாவா கோவிலின் நிர்வாகஸ்தர்களின் ரசீது புத்தகம் என்று சொன்னால் அது சரிதான். ரசீது எண்கள் 2 , 30 அதில் வாதிகளின் பிரதிநிதி குருவராஜ் என்பவர் கையொப்பம் செய்து ரசீது போட்டுள்ளார் என்றால் சரிதான். அதுபோல் ரசீதுஎண்கள் 134, 146 பால்பாண்டி என்பவர் பணம் வசூல் செய்து ரசீது போட்டுள்ளார் என்றால் சரிதான். அவர் சேர்வை சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. ரசீது எண்.316, 322ல் மனோகரன் என்பவர் நன்கொடையை செலுத்தியுள்ளதாக உள்ளது என்று சொன்னால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. பி.வா.சா.ஆ.8 போட்டோவானது தாவா கோவிலில் நடந்த திருவிழாவின் போது எடுக்கப்பட்ட போட்டோ என்றால் சரிதான். அதில் புளூக்கலரில் கைலி கட்டி உள்ளவர் தான் வாதிகளின் பிரதிநிதி முத்துக்குமார் என்ற நபர் என்றால் சரிதான். அவரும் அவரது குடும்பத்தினரும் கோவிலில் நடைபெறும் அனைத்து திருவிழா நிகழ்வுகளில் கலந்துகொள்வார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணத்தில் கண்ட சொத்தானதை கோவிலுக்கு என்று வசூல் செய்து பி.வா.சா.ஆ.13 ஆவணத்தில் கண்ட நபர்கள் பெயரில் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்பதை காண்பிக்கவே தாக்கல் செய்துள்ளேன். சாட்சி மீண்டும் தானாக மேற்படி சொத்தானதை கோவில் பெயருக்கு எழுதிக்கொடுக்கவேண்டும் என்று சொல்லி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறார். மேற்படி விபரத்தை நான் தற்போது சாட்சியமாக அளிப்பதை எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லியுள்ளேனா என்றுகேட்டால் சொல்லவில்லை. பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் கண்ட் சொத்தானது இந்த கோவிலுக்கு சம்மந்தப்பட்ட சொத்து என்று சொன்னால் அது சரியல்ல. கோவிலின் வரவு செலவு கணக்குகள் எங்களது சங்க வரவு செலவு கணக்குகளில் பிரதிபலிக்காது. தாவா கோவிலானது பாணர்குல தையல்காரர் சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்கக்கூடிய எந்த ஆவணத்தை நான் தாக்கல்

செய்துள்ளேன் என்று கேட்டால் வருவாய் துறை ஆவணங்களும் ஊராட்சி மன்ற ஆவணங்களும் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு வருவாய் துறை ஆவணங்கள் என்ன என்பதும் ஊராட்சி மன்ற ஆவணங்கள் என்ன என்பது பற்றியும் தெரியும். வருவாய் துறை ஆவணங்களாக என்ன ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டால் பி.மெமோ ரசீதை தாக்கல் செய்துள்ளேன். ஊராட்சி மன்ற ஆவணமாக எதை தாக்கல் செய்துள்ளேன் என்றுகேட்டால் தாவா கோவிலுக்கு ரோடு, லைட் போவதற்காக பஞ்சாயத்து போடானது தீர்மானம் போட்டு அனுப்பியதை தாக்கல் செய்துள்ளேன். தாவா கோவிலுக்கு சொத்துவரி உள்ளதா என்று கேட்டால் இல்லை. தாவா கோவிலுக்கான வரவு செலவு புத்தகம் யார் வசம் இருக்கும் என்று கேட்டால் கோவிலின் பூசாரி வசம் இருக்கும் மற்றும் பழைய தலைவரின் வசம் இருக்கும். பி.வா.சா.ஆ.17 ஆவணமானது தாவா கோவிலுக்கான சொத்துவரி ரசீது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.17 ரசீது உள்ளது பற்றி எனக்கு ஏற்கனவே தெரியும். கோவிலுக்கு சொத்துவரி ரசீது இல்லை என்று நான் எதன் அடிப்படையில் சாட்சியம் அளித்தேன் என்று கேட்டால் பி.வா.சா.ஆ.17 ஆவணம் உள்ளது ஆனால் நான் தவறாக சாட்சியம் அளித்தேன். பி.வா.சா.ஆ.17 ஆவணத்தில் பாணர்குல தையல்காரர் சங்கம் என்று உள்ளதா என்று கேட்டால் இல்லை. பி.வா.சா.ஆ.20 ஆவணம் என்னவென்று கேட்டால் கோவிலை திறக்கவேண்டும் என்று சொல்லி எங்கள் சங்கத்தில் இருந்து சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் நாங்கள் மனுவை தாக்கல் செய்தது என்பதாகும். மேற்படி சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் பிறந்த உத்தரவில் முத்துக்குமாருக்கு சாதகமாகவோ அல்லது எதிராகவோ, பேயாண்டிக்கு சாதகமாகவோ எதிராகவோ இந்த உத்தரவை எடுத்துக்கொள்ள கூடாது என்று அதில் சொல்லப்பட்டதாக உள்ளது என்று சொன்னால் மேற்படி உத்தரவில் அப்படி தான் உள்ளது. தாவா கோவிலை பற்றிய பிரச்சனைக்கு உரிமையியல் நீதிமன்றம் தான் தீர்வு காண முடியும் என்று அந்த உத்தரவில் சொல்லியுள்ளது என்று சொன்னால் சரிதான்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி வாதிகள் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 09th day of September 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.